செய்தி வெளியீடு

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL), ஜப்பானின் உலகளாவிய ஆயுள் காப்புறுதி மேம்பாட்டு அறக்கட்டளை (FALIA) மற்றும் இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL) இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆயுள் காப்புறுதி கட்டுரை போட்டியை அறிமுகப்படுத்துகின்றன: நிதி அறிவாற்றலின் மூலம் எதிர்கால தலைமுறையை வலுப்படுத்துதல்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, ஜப்பானின் உலகளாவிய ஆயுள் காப்புறுதி மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் இலங்கை காப்புறுதிச் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், **"பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆயுள் காப்புறுதிக் கட்டுரை போட்டி – இலங்கை 2026"** அறிமுகப்படுத்தப்படுவதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

இந்தப் போட்டி, ஜப்பானின் உலகளாவிய ஆயுள் காப்புறுதி மேம்பாட்டு அறக்கட்டளை, ஜப்பான் என்ற சர்வதேச இலாப நோக்கமற்ற அமைப்பின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது. நிதி அறிவாற்றலை மேம்படுத்துவதற்கும், கல்வி, ஆய்வு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் ஆயுள் காப்புறுதி குறித்த பொதுமக்களின் புரிதலை வளர்ப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படும் அமைப்பாக ஜப்பானின் உலகளாவிய ஆயுள் காப்புறுதி மேம்பாட்டு அறக்கட்டளை திகழ்கிறது.

"இளம் சிந்தனைகளுக்கு ஊக்கமளிப்போம்: நாளைய எதிர்காலத்தைப் பாதுகாப்போம்" என்ற இந்த முயற்சி, ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம், எதிர்கால நிதித் தேவைகளுக்குத் தயாராக இருப்பதன் அவசியம் மற்றும் தகவலறிந்து நிதி முடிவுகளை எடுப்பதன் மதிப்பு ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், பாடசாலை மாணவர்களுக்கு அத்தியாவசிய நிதி அறிவை வழங்கி அவர்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டுரைப் போட்டி, குடும்பத்தின் நிதிப் பாதுகாப்பு, நீண்டகால நிதித் திட்டமிடல், இடர் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை போன்ற தலைப்புகளைப் பற்றி மாணவர்கள் ஆழமாகச் சிந்திக்க ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அவர்களின் எழுத்துத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் தொடர்பாடல் திறன்களையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்போட்டி இலங்கை முழுவதும் உள்ள அரசுப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளது. இப்போட்டி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும்.

வயது பிரிவுகள் மற்றும் தகுதிகள்

கட்டுரைப் போட்டி பின்வரும் இரண்டு வயது பிரிவுகளின் கீழ் நடத்தப்படும்:

- **கனிஷ்ட பிரிவு (13–16 வயது)**
  இந்தப் பிரிவில் பங்கேற்கும் மாணவர்கள் 1 ஜனவரி 2010 முதல் 31 டிசம்பர் 2013 வரையிலான காலப்பகுதியில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
- **சிரேஸ்ட பிரிவு (17–19 வயது)**
  இந்தப் பிரிவில் பங்கேற்கும் மாணவர்கள் 1 ஜனவரி 2007 முதல் 31 டிசம்பர் 2009 வரையிலான காலப்பகுதியில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.

பதிவு செய்வதற்கான காலம் 15 ஜூலை 2026 முதல் 30 செப்டம்பர் 2026 வரை திறந்திருக்கும். பதிவு செய்வதற்கு முன், விண்ணப்பதாரர்கள் பதிவு தொடர்பான வழிமுறைகளை கவனமாக வாசித்து, தங்களது

பாடசாலை விவரங்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொடர்பு விவரங்கள், விருப்பமான பரீட்சை மாவட்டம், மற்றும் பாவனையில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி இலக்கம் ஆகியவற்றை முன்கூட்டியே தயாராக வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கட்டுரைப் போட்டி ஒக்டோபர் மாதம் 2026ல், இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். போட்டி நடைபெறும் நாளில் வழங்கப்படும் நான்கு கட்டுரைத் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதற்கான கட்டுரையைப் போட்டியாளர்கள் எழுத வேண்டும். பரீட்சைக்கான அதிகபட்ச நேரம் 1 மணி நேரம் 30 நிமிடங்கள் ஆகும்.

இப்போட்டியில் பங்கேற்றல் முற்றிலும் இலவசம் என்பதனால், இதன் மூலம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாணவர்களுக்கு சமமான வாய்ப்புகள் இதில் பங்கேற்க வழங்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள், ஆயுள் காப்புறுதி என்பது நிதித் திட்டமிடலுக்கான ஒரு முக்கிய கருவி என்பதைப் புரிந்துகொள்வதோடு, குடும்பத்தின் நிதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், நிதி பாதுகாப்பை வழங்குதல், இழந்த வருமானத்திற்கு மாற்றீடாக பெறுதல், நீண்டகால சேமிப்பை ஊக்குவித்தல், எதிர்காலத் தேவைகளுக்குத் திட்டமிடுதல், நிதி இடர்களை நிர்வகித்தல், பொருளாதார நிலைத்தன்மைக்கு பங்களித்தல், குடும்ப நலனை மேம்படுத்துதல் மற்றும் தனிநபர்கள் தங்களது வாழ்க்கை இலக்குகளை அடைய உதவுதல் போன்ற முக்கிய கருத்துகளைப் பற்றிய புரிதலை வளர்த்துக்கொண்டு போட்டிக்குத் தயாராகுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். பரீட்சை நாளில், இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஏற்ப போட்டியாளர்கள் கட்டுரை எழுத வேண்டும்.

தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப் பரிசுகள்:

முதலாம் இடம் – ரூ. 75,000

இரண்டாம் இடம் – ரூ. 50,000

மூன்றாம் இடம் – ரூ. 25,000

மேலதிகமாக, இரு பிரிவுகளிலும் இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் 144 மாவட்ட திறமைப் பரிசு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு வெற்றியாளருக்கும் ரூ. 5,000 பணப் பரிசு வழங்கப்படும்.

தேசிய மட்ட வெற்றியாளர்களும் மாவட்ட திறமைப் பரிசு பெறுபவர்களும் அச்சிடப்பட்ட சான்றிதழ்களைப் பெறுவார்கள். மேலும், போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு மாணவருக்கும், அவர்களின் பங்கேற்பை பாராட்டும் வகையில் உத்தியோகபூர்வ மின்னிலத்திரனியல் சான்றிதழ் வழங்கப்படும்.

இளம் தலைமுறையினரின் நிதி அறிவாற்றலை மேம்படுத்துவது நாட்டின் எதிர்காலத்திற்கு செய்யப்படும் முக்கிய முதலீடாகும் என்பதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு உணர்ந்துள்ளது. சிறுவயதிலிருந்தே ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம், நிதி பாதுகாப்பு மற்றும் பொறுப்பான நிதித் திட்டமிடல் குறித்து மாணவர்கள் புரிந்துகொள்ள உதவுவதன் மூலம், சரியான நிதிசார் முடிவுகளை எடுக்கக்கூடிய, பொறுப்புணர்வும் விழிப்புணர்வும் கொண்ட ஒரு தலைமுறையை உருவாக்குவதையும், நிதி ரீதியாக பாதுகாப்பான சமூகத்திற்கு பங்களிப்பு செய்ய வைப்பதையும் இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த தேசிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், தகுதியுள்ள பாடசாலை மாணவர்களை போட்டியில் பங்கேற்கவும் அதற்காகத் தயாராகவும் ஊக்குவிக்குமாறு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் வழிகாட்டுதலும் ஊக்கமும், மாணவர்கள் நிதித்

திட்டமிடல் குறித்த அறிவையும், தங்களது எதிர்காலத்தை பாதுகாப்பதில் வாழ்க்கைக் காப்புறுதியின் முக்கிய பங்கையும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவும்.

பதிவு செய்தல், போட்டி வழிகாட்டுதல்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்கு, IRCSL-இன் உத்தியோகபூர்வ இணையதளமான www.ircsl.gov.lk மற்றும் அதன் உத்தியோகபூர்வ சமூக ஊடகப் பக்கங்களைப் பார்வையிடவும்.



இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01

இணையத்தளம்: www.ircsl.gov.lk	மின்னஞ்சல்: info@ircsl.gov.lk
தொலைபேசி: 011 2396184 - 9	∴பக்ஸ்: 011 2396190

11.08.2026